# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**<u>சுற்றறிக்கை எண்:167</u>** **<u>தேதி:-07.09.2014</u>**

## கோரிக்கைகள் வெற்றிபெற
## வேலை நிறுத்தம்-JAC முடிவு

அன்பார்ந்த தோழர்களே,

05.09.2014 அன்று JACயின் கூட்டம்புது டெல்லியில் அதன் தலைவர் தோழர் C.சிங் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அனைவரையும் வரவேற்று பேசிய JACயின் அமைப்பாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள், நடைபெற்ற கோரிக்கை தின இயக்கம் தொடர்பாக விவரித்ததுடன், பல்வேறு பிரச்சனைகளின் தற்போதைய நிலைமை தொடர்பாக எடுத்துரைத்தார். E-1ஊதிய விகித பிரச்சனை மற்றும் JTO தேர்விற்கான புதிய பணியெடுப்பு விதிகள்(RR) உள்ளிட்ட விஷயங்கள் கூட இயக்குனர் குழு ஒப்புதல் தராத காரணத்தால் தேங்கிக் கிடப்பதை சுட்டிக்காட்டினார். அதன் பின் ஆய்படு பொருட்களின் மீது விரிவான விவாதம் நடைபெற்றது. BSNLEU, NFTE, BSNL MS, TEPU, SNATTA, BTEU, FNTOBEA, BTU மற்றும் BSNL WRU ஆகிய சங்கங்களின் பிரதிநிதிகள் விவாதத்தில் பங்கேற்றனர். கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்பட்டன:-

1) 27.06.2014 அன்று JAC மற்றும் நிர்வாகத்திற்கு இடையே நடைபெற்ற பேச்சு வார்த்தையில் இடம்பெற்ற எந்த பிரச்சனையின் மீதும் முன்னேற்றம் இல்லாத காரணத்தால் இந்தக் கூட்டம் தனது கடும் அதிருப்தியையும், சீற்றத்தையும் தெரிவிக்கின்றது.

2) **போராட்டத்தை தீவிரப்படுத்தும் வகையில் மாவட்ட மாநில தலைநகர்களிலும், கார்ப்பரேட் அலுவலகம் முன்பும் 23.09.2014 அன்று ஒரு நாள் தர்ணா நடத்தப்பட வேண்டும்.**

3) **30.09.2014 அன்று காலை 11.00 மணிமுதல் பிற்பகல் 01.00 மணி வரை இரண்டு மணி நேர வெளி நடப்பு போராட்டம் நடத்தப்பட வேண்டும்.**

4) நவம்பர் மாதத்தில் ஒரு நாள் வேலை நிறுத்தம். அதற்கான தேதி 04.10.2014 அன்று நடைபெறும் அடுத்த JAC கூட்டத்தில் முடிவு செய்யப்படும்.

நமது 30 அம்ச கோரிக்கைகளுக்காக நடைபெறும் இந்த போராட்டங்களை வெற்றிகரமாக அமுல்படுத்திடுவோம். வெற்றி பெறுவோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

S. Chellappa

**(S.செல்லப்பா)**
**மாநில செயலாளர்.**